**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 87/2020

நாள்: 13.08.2026

பெயர்: ராஜாராமன் (பி.வா.சா.1)                    த/பெ: கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1. எனக்கு வயது 63 ஆகிறது. எனது தாத்தா பெயர் ரத்தின படையாட்சி. எனது தாத்தாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பேர்கள். 1.தனத்தம்மாள் 2.கலியபெருமாள் (எனது அப்பா) 3. காசிநாதன் 4.ஆரவள்ளி. எனது அப்பா இறந்து விட்டார். தனத்தம்மாளும் இறந்து விட்டார். எனது அப்பாவிற்கு 4 வாரிசுகள். 1.சக்கரவர்த்தி 2.மலர்விழி 3.ராஜாராமன் (நான்) 4.ஜோதி. நான் தாக்கல் செய்திருக்கும் எனது தரப்பு சான்றாவணம் பி.வா.சா.ஆ.5 பட்டா எங்கள் நால்வர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இதற்கு முன்பு இந்த பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனது அப்பா பெயரில் இருந்தது. எனது அப்பா எத்தனை ஆண்டு காலமாக இந்த சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் 60, 70 ஆண்டுகள் இருக்கும். இந்த சொத்து எனது அப்பாவிற்கு பாகப்படி கிடைத்த சொத்தாகும். சர்வே எண் 34/3டி, 35/7, 35/6பி பட்டா எங்களது பெயரில் உள்ளது அனுபவம் வாதியிடம் உள்ளது. சர்வே எண் 34/3டி, 35/7, 35/6பி எங்களுடைய சொத்து ஆகும். ஏன் அது வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் தாவா சொத்து பட்டா அவர் பெயரில் உள்ளது அனுபவம் எங்களிடம் உள்ளது.

2. பாகபிரிவினை வாய்மொழியாக ஏற்பட்டது. தனியாக எழுதி பதிவு செய்யப்படவில்லை. சர்வே எண் 34/3ஏ, 34/6ஏ, 34/7ஏ வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அதன் அனுபவம் எங்களிடம் 30 வருடங்களுக்கு மேலாக உள்ளது. சர்வே எண் 34/3ஏ, 34/6ஏ, 34/7ஏ உண்டான சொத்துக்கள் எனது அப்பாவிற்கு பாகத்தில் கிடைத்தது இல்லை

என்றால் சரியல்ல. ஆனால் இந்த சர்வே எண்ணுக்கு உண்டான வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் செட்டில்மென்ட் வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 34/3ஏ, 34/6ஏ, 34/7ஏ உண்டான சொத்துக்கள் எனது அப்பாவிற்கு பாகத்தில் கிடைத்தது என்ற சங்கதியை எனது எதிர் வழக்குரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் நான் வழக்குரையிலோ அல்லது பிராமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் கொள்ளு தாத்தா அய்யாருக்கு பாத்தியப்பட்டது என்றும் பின்னர் வாதியின் தாத்தா ரத்தினத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் அதன் பின்பு பிரதிவாதியின் அத்தை தனத்திற்கும் அவருடைய தந்தை இறக்கும் பொழுது பாகமாக ஒதுக்கியது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சாட்சி தாமாக முன்வந்து அவரது அத்தை தனத்தம்மாள் வாழாமல் வந்ததால் ரூ.400/– ஐ ஜீவனாம்சமாக பெற்று வந்தார் என்றும் எனது அப்பா, தாத்தா, சித்தப்பா இருக்கும் பொழுதே தாத்தாவிடம் ரூ.400/– ஐ கொடுத்து விட்டு தனக்கு பின்பு அந்த சொத்தை எனது அப்பாவிற்கு கொடுத்தாக கூறுகிறார். மேலும் ஆரவல்லி மகளை நான் திருமணம் செய்ததால் அதற்காகவும் கொடுத்ததாக கூறுகிறார். இந்த விபரங்களை நான் எனது எதிர் வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்ற காரணத்தினால் இந்த சங்கதிகளை நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா ரத்தின படையாட்சி எனது அத்தை தனத்தம்மாளுக்கு தாவா சொத்தை ஒதுக்கி கொடுத்தார் என்றால் சரியல்ல.

3. இருக்கும் வரை அவர் தான் அனுபவம் செய்து வந்தார். எனது எதிர் வழக்குரையில் தாவா சொத்தை எனது தாத்தா அத்தைக்கு ஒதுக்கியுள்ளார் என குறிப்பிட்டுள்ளேன் தற்போது சாட்சியம் அளிக்கும் பொழுது இல்லை என்று கூறுவது எதனால் என்றால் வாய்மொழியாக ஒதுக்கினார்களே தவிர்த்து எழுத்து

பூர்வமாக எழுதவில்லை. எந்த வருடம் அவ்வாறு ஒதுக்கி கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அப்பாவிற்கும் சித்தப்பாவிற்கும் தான் தெரியும். எந்த காலத்திலும் எனது தாத்தா தனத்தம்மாளிற்கு சொத்தை ஒதுக்கி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் தங்கை ஆரவள்ளி மகளை தான் நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 20.04.1997 ல் தனத்திற்கு பாகமாக ஒதுக்கிய சொத்தை அவருடைய தங்கை ஆரவள்ளி மகளை நான் திருமணம் செய்து கொண்ட பொழுது தனக்கு வாரிசு எதுவும் இல்லாத காரணத்தினால் தனக்கு சீராக கொடுத்த அதனுடைய மதிப்பு அப்போது சுமார் ரூ.50,000/– இருக்குமா என்றால் இருக்கும். ஆரவள்ளி பெயரில் தனம் ஏதேனும் பதிவு செய்யப்பட்ட பத்திரம் ஏதேனும் எழுதினார்களா என்றால் இல்லை.

4. எழுத்து பூர்வமான ஒரு ஆதரவு மட்டுமே கொடுத்தார். தானத்தம்மாள் பெயரிலே முதலில் பத்திரங்கள் ஏதும் இல்லை. அந்த ஆதரவு கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தனத்தம்மாள் அந்த ஆதரவு கடிதத்தை யாருக்கு எழுதி கொடுத்தார் என்றால் தனது தங்கை மகள் வசந்தாவிற்கு எழுதி கொடுத்தது. அவ்வாறு ஆவணத்தை நாங்களே மோசடியாக தயார் செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. தனத்தம்மாள் தனது தங்கை மகளுக்கு எழுதி கொடுத்த எவ்வித உரிமையோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. தனம் பெயரிலோ ஆரவள்ளி பெயரிலோ பட்டா ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை எந்த ஆண்டு தனத்தம்மாள் எங்களுக்கு கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1997. 1997 ஆம் ஆண்டு முதல் தாவா சொத்து வாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். இத்தனை ஆண்டு காலமாக பட்டாவை எங்களது பெயரில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தோமா என்றால் எடுத்தோம். என்ன நடவடிக்கைகள் எடுத்தோம் என்றால் தாசில்தாரிடம் மனு அளித்துள்ளோம். அதை குறித்து ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

இல்லை. சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாத காரணத்தினால் பட்டா மாறுதலுக்காக நாங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு நான் சக்கரவர்த்தி எனது தகப்பனார் கலியபெருமாளும் சேர்ந்து 20.04.1995 ல் வாதிக்கு ஒரு கிரயம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

5. எனது அப்பாவும் சித்தப்பாவும் சேர்ந்து மேற்கால் இருப்பதை எனது அப்பாவிற்கும் கிழக்கால் இருப்பதை எனது சித்தப்பாவும் பிரித்து கொண்டார்கள். அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக லோன் வாங்க வேண்டும் என்று கூறி கையெழுத்து பெற்று கொண்டார். அந்த கிரய சொத்தை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். சாட்சி தாமாக முன்வந்து எனது அத்தை தனத்தம்மாள் 1 1/2 செண்டை வாங்கிய இருந்தார்கள் அதையும் சேர்த்து பெற்று கொண்டார்கள். இந்த பத்திரத்தில் தனம், தனத்தம்மாள் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான் வாதியின் சொத்தை அபரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் என்னுடன் சேர்ந்து மற்றவர்களும் மாரியம்மன் கோவிலுக்கு கும்பாபிசேகம் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் ஊரில் செல்வாக்கு உள்ளவர் என்றால் சரியல்ல. வாதி காசிநாதனுடைய வாரிசுகள் வெளியூரில் வேலையில் உள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சி தாமாக முன்வந்து எனது அப்பா தான் கஷ்டப்பட்டு வாதியை படிக்க வைத்தார் என்றும் எனது அம்மா தனது தாலியில் உள்ள குண்டை விற்று தான் அவருக்கு வேலை வாங்கி கொடுத்தார் என்றும் கூறுகிறார். தாவா சொத்துக்கள் உட்பட குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் எனது தாத்தாவிற்கு பின்னர் எனது அப்பா தான் அனுபவம் செய்து வாதிக்கு திருமணம் ஆன பின்னர் தான் பிரித்து கொடுத்தார். எனது அப்பா குடும்ப வருமானத்தை வைத்து தான் வாதியை படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. கொத்தனார் வேலை செய்து தான் படிக்க வைத்தார். வாதி அனுபவம் செய்து வருவதை அடியாட்களை வைத்து மிரட்டுகிறோம் என்று

சொன்னால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் அவரது அனுபவத்தை இடையூறு செய்து வருவதால் தான் இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஒப்பம்/−ராஜாராமன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/−S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்